முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| வழக்கு எண் | L.A.O.P | 89 | of | 2024 |
|---|---|---|---|---|

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07–ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கே.என் வரதராஜன் |
| தந்தை பெயர் | நாகப்பன் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 59 |

நாள் 07 .02.2026 – எ.ம.சா.1 (W1)

**குறுக்கு விசாரணை**

நான் தனி வட்டாட்சியர் நிலை எடுப்பு பிரிவில் நெடுஞ்சாலைகள் அலகு நான்கு ஆக தற்போது பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் தனி வட்டாட்சியர் நெடுஞ்சாலைகள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட நிலம் சென்னை திருப்பெரும்புதூரில் இருந்து சிங்கப்பெருமாள் கோவில் இருக்கு போவதற்கான சாலை அகலப்படுத்தும் இடம் என்றால் சரிதான். இந்த திட்டம் சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை தொழில் பூங்கா அமைப்பதற்கு ஆர்ஜிதம் மேற்கொள்ளப்பட்டதா அல்லது தனிப்பட்ட திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா என்றால் ஒரகடம் தொழில் பூங்கா அமைப்பு சம்பந்தமாக ஆர்ஜிதம் செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்திற்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதற்காக சிறப்பு ஆர்ஜித அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் சம்பந்தமான பரிந்துரை நீதிமன்றத்திற்கு அனுப்பும் போது சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை தொழில் பூங்கா அமைப்பதற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த திட்டத்தின் கீழ் வட்டாட்சியர் அதிகாரி மட்டும்தான் என்றால் சரிதான். மேற்படி திட்டத்தில் என்னை நில ஆர்ஜித

அதிகாரியாக அரசாங்கம் நியமிக்கவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் மாவட்ட வருவாய் அலுவலர் சார்பாக நான் சாட்சிமளிக்கிறேன். கோரிக்கையாளர் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக சதுர அடி ஒன்றிற்கு எவ்வளவு தொகை கேட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ் வழக்கு சம்பந்தமான பரிந்துரையை உடன் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் நகல் மட்டும் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஆர்ஜிதம் செய்த நிலங்கள் இழப்பீட்டை நிர்ணயம் செய்ய கடந்த மூன்று ஆண்டுகள் கணக்கிட்டு சேகரித்த நில ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு உண்டான வரைபடம் அல்லது இணைப்புகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இணைப்புகளை நாங்கள் வைத்துள்ளோம். அதில் வரைபடமும் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் நான் தாக்கல் செய்துள்ள தீர்ப்பாணையில் மேற்படி ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஆர்ஜித சொத்திற்கு இழப்பீடு நிர்ணயம் செய்ய நில ஆர்ஜித அதிகாரி கருத்தில் கொண்ட மாதிரி கிரைய ஆவணங்கள் 2327, 2085 மற்றும் 2741 ஆகிய ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோரிக்கையாளர்களின் மனு சம்பந்தமாக அனுப்பப்பட்ட பரிந்துரையுடன் மாதிரி கிரைய பத்திரங்கள் மற்றும் ஆவணங்களும் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் அதை தாக்கல் செய்தால் நாங்கள் நிர்ணயம் செய்த தொகைக்கும் மாதிரி நிலமாக தேர்வு செய்த நிலமும் ஆர்ஜித சொத்தும் மதிப்பிலும் தரத்திலும் தன்மையிலும் ஒன்றல்ல என்று தெரிந்துவிடும் என்பதால் தான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. கோரிக்கையாளர் தரப்பில் இழப்பீடு கூறுவதற்கு எந்த இடத்தை மாதிரி தேர்வு செய்து அதற்கான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தேன். கோரிக்கையாளர் தரப்பில் பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் கோ.மா.சா.ஆ 2 10.12.2008 தேதியிட்ட ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரமாண வாக்கமூலத்தில் நான்காம் பக்கத்தில் தாக்கல் செய்துள்ள இணைப்பில் குறிப்பிட்டுள்ள மூன்று கிரைய பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த நிலங்களை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. ஆர்ஜித சொத்திற்கு நாங்கள் மாதிரி நிலமாக தேர்வு செய்த சொத்திருக்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் தெரியாது. மாதிரி நிலமாக தேர்வு செய்து இணைப்பு மூன்றில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் திருப்பெரும்புதூர் சிங்க பெருமாள் கோயில் நெடுஞ்சாலையில் அமையவில்லை என்றால் 1.6 கிமீ சுற்றளவில் உள்ளது. கோரிக்கையாளரின் சொத்தை போல் அந்த சொத்து நெடுஞ்சாலையிலேயே அமைந்துள்ளதா என்றால் அது கொஞ்சம் தள்ளி உள்ளது. கோரிக்கையாளரின் சொத்து நெடுஞ்சாலையின் மீது சாலையை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். கோரிக்கையாளர் தரப்பில் ஒப்படைக்கப்பட்ட கோ.மா.சா ஆ 3 11.05.2009 தேதியிட்ட கிரைய பத்திர சொத்தை நான் நேரடியாக

சென்று பார்த்துள்ளேன் என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்தும் கோ.மா.சா ஆ 2 மற்றும 3 மற்றும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்து மதிப்பிலும் தரத்திலும் தன்மையிலும் ஒரே மாதிரியானது என்றால் தவறு. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்கு வட்ட வடிவில் 1600 மீ சுற்றளவில் ஆர்ஜித சட்ட பிரிவு 15(2) ன் படி 26.08.2009 தேதிக்கு முன்பாக மூன்றாண்டு காலத்திற்குள் நடைபெற்ற கிரையங்கள் அனைத்தையும் ஆய்வு செய்து அதில் எந்த இடம் ஆர்ஜித சொத்திற்கு ஏற்றது என்றும் எந்த வகையில் மதிப்பிலும் தரத்திலும் தன்மையிலும் ஒன்றாக உள்ளதோ அதனை மாதிரி நிலங்களாக தேர்வு செய்திருந்தால் நியாயமான இழப்பீடு தொகை வழங்கப்பட்டிருக்கும் என்றால் தவறு. மூன்றாண்டு காலத்திற்கு சேகரித்த விற்பனை தரவுகளில் மூன்று ஆவணங்களை மட்டும் எதன் அடிப்படையில் மாதிரி நிலமாக தேர்வு செய்தேன் என்பதற்கு கண்டறியப்பட்டு விவரிக்கவில்லை என்றால் தவறு. மேற்படி விவரங்கள் எதுவும் தீர்ப்பாணையில் விவாதிக்கவில்லை என்றால் சரியல்ல. தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ள இணைப்பு 3(a) தேர்வு செய்த நிலத்தை மாதிரி நிலமாக தேர்வு செய்தது 2013 நில ஆர்ஜித சட்டத்திற்கு விரோதமானது என்றால் சரியல்ல. நாங்கள் வழங்கிய இழப்பீடு தொகை மிக குறைவானது என்று கோரிக்கையாளர் கூறியுள்ள சதுரடி ஒன்றிற்கு ரூபாய் 2000 என்று நியாயமான இழப்பீட்டுத் தொகை நியாயமானது என்றால் தவறு. ஆர்ஜித அதிகாரி நிர்ணயம் செய்த இழப்பீடு தொகை தொகையில் மூன்றில் ஒரு பங்கினை மேம்பாட்டு கட்டணமாக குறைத்தது 2013 நில ஆர்ஜித சட்டத்திற்கு விரோதமானது என்றும் அந்த தொகையினை நாங்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரிதான். தற்போது அது அரசு வழக்கறிஞர் கருத்துரைக்கு சென்றதாக சாட்சி சொல்கிறார். கோரிக்கையாளர் கோரிக்கை மனுவில் கூறியுள்ள தொகையின்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Court,
Kancheepuram.